


**04. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்களிப்பு நாடாக சிங்கப்பூர்** திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்களால் நடுத்தர மற்றும் குறைந்த** வருவாய் பிரிவினரின் நிதிச்சுமை பெருமளவு குறையும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. **தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் ஒட்டுமொத்தம்** மற்றும் பொறியியல் பிரிவுகளில் சென்னை **I.I.T.** தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

4. **லண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழத்தில் முதலமைச்சர்** திரு.மு.க.ஸ்டாலின் இன்று சிறப்புரையாற்றுகிறார்.

5. **தமிழ்நாட்டில் புதிய நோய்த்தொற்று எதுவும் இல்லை என்று** மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வாங்கின் இந்திய வருகை,** இருநாடுகள் இடையிலான 60 ஆண்டு நட்புறவை பறைசாற்றுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சிங்கப்பூர் பிரதமருடன் பேச்சுவார்த்தைக்கு பின்னர் இன்று உரையாற்றிய பிரதமர், இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்களிப்பு நாடாக சிங்கப்பூர் திகழ்கிறது என்றார்

இருநாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, மக்கள் பரிவர்த்தனை மேலும் வலுப்பெற்றுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஒத்துழைப்பு மேம்பாடு தொடர்பான எதிர்கால வரைபடத்தை இருநாடுகளும் இணைந்து தயாரித்திருப்பதாக கூறிய பிரதமர், கலாச்சார பிரிவுகளில் மட்டுமல்லாமல், உற்பத்தி, பசுமை கப்பல் கட்டுமானம், திறன்மேம்பாடு, அனுசக்தி, நகர்ப்புற நீர் மேலாண்மை, கட்டமைப்பு பிரிவுகள் போன்றவற்றிலும் ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும் என்றார்.

முன்னதாக மும்பை ஜவஹர்லால் நேரு துறைமுகத்தின் 2-வது கட்ட வளர்ச்சிப்பணிகளை இரு பிரதமர்களும் காணொலி மூலம் துவக்கி வைத்தனர்.

இருநாடுகளுக்கிடையே முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

தொடர்ந்து குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை, சிங்கப்பூர் பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**பிரதமர் - அஞ்சல்துறை**

உலகளாவிய பெரிய அளவிலான வங்கி கட்டமைப்புடன் இல்லந்தோறும் சேவையாற்றும் துறையாக நாட்டின் அஞ்சல்துறை உருவெடுத்து உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

மத்திய அரசின் தொடர் நடவடிக்கைகளால் நிதி உள்ளடக்கத்தில் அஞ்சல் பணியாளரும் அங்கம் வகிப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

நம் நாட்டின் அஞ்சல்துறை மற்றும் அஞ்சல் வங்கி கட்டமைப்பு குறித்து மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியாவின் சமூக வலைதளப்பதிவிற்கு பதிலளித்த பிரதமர், 140 கோடி இந்தியர்களின் வாயிலுக்கே சென்று அஞ்சல் துறை சேவையாற்றுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**அஷ்வினி வைஷ்ணவ்**

**சரக்கு சேவை வரி குறைப்பால் நடுத்தர மற்றும்** குறைந்த வருவாய் பிரிவினரின் நிதிச்சுமை பெருமளவு குறையும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குருகிராமில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இந்த சாதனைமிகு அறிவிப்பு அனைத்து பிரிவினருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த சீர்த்திருத்தங்கள் பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அர்ப்பணிப்பு மிகு சேவையை பறைசாற்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

சரக்கு சேவைவரி குறைந்துள்ளதால் அத்தியாவசிய உணவு பொருட்கள், வீட்டு உபயோக சாதனங்கள், மாணாக்கருக்கான கல்வி உபகரணங்கள், நுகர்வோர் பயன்படுத்தும் மின்னனு சாதனங்கள், கார், இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலை நவராத்திரியின் முதல் நாளிலிருந்து குறையும் என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

**பியூஷ்கோயல்**

**நாட்டு மக்களுக்கான தீபாவளி பரிசாக சரக்கு** சேவைவரி குறைக்கப்பட்டுள்ளது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் மருந்தியல் தொழில்நுட்பம் சார்ந்த கண்காட்சியில் இன்று சிறப்புரையாற்றிய அமைச்சர், நுகர்வோர் தொடங்கி நாட்டிலுள்ள அனைத்து பிரிவினரும் இதனால் பயனடைவார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான பாதையில் நேற்றைய வரி சீரமைப்பு அறிவிப்புகள் முக்கிய அங்கம் வகிக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

2047-ம் ஆண்டு வாக்கில் 30 டிரில்லியன் பொருளாதாரத்தை நோக்கி நம்நாடு பயணிப்பதாக அவர் உறுதிபட தெரிவித்தார்.

140 கோடி இந்திய மக்களின் ஒட்டுமொத்த அர்ப்பணிப்பால் நமது பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவதாக கூறிய அமைச்சர், பிரதமர் திரு. நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் இந்த எழுச்சிமிகு பொருளாதார வளர்ச்சி சாத்தியமானதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**தங்கம் தென்னரசு**

**ஆயுள் காப்பீடு, மருத்துவ காப்பீடு** உள்ளிட்டவற்றிற்கு சரக்கு சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு வரவேற்றுள்ளார்.

இதனிடையே, சரக்கு சேவை வரி குறைப்பு குறித்து தர்மபுரியை சேர்ந்த சிறு-குறு தொழில்நிறுவன கூட்டமைப்புத்தலைவர் **திரு.வெங்கடேஷ் பாபு** பேசுகையில்,

**.. வாய்ஸ் ..**

இதேபோல், நாமக்கல் ராசிபுரம் பகுதியை சேர்ந்த வர்த்தகர் **திரு.மணிகண்டன்,** சரக்கு சேவை வரி சீர்திருத்தத்தை வரவேற்றுள்ளார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**தர்மேந்திர பிரதான்**

**தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பு** பட்டியலை மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் புதுதில்லியில் இன்று வெளியிட்டார்.

சென்னை இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் **I.I.T.** ஒட்டுமொத்த பிரிவில் தொடர்ந்து 7-வது முறையாகவும்,

பொறியியல் பிரிவில் தொடர்ந்து 10-வது முறையாகவும் முதலிடத்தை வகித்து சாதனை படைத்துள்ளது.

ஒட்டுமொத்த பிரிவில்,

இரண்டாவது இடத்தை பெங்களூரு இந்திய அறிவியல் கல்வி நிறுவனமும்,

3-வது இடத்தை மும்பை இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனமும் பெற்றுள்ளன.

மேலாண்மை பிரிவில் அஹமதாபாத் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனமும்,

சட்டப்பிரிவில் பெங்களூரு இந்திய பல்கலைக்கழக தேசிய சட்டப்பள்ளியும் முதலிடத்தை பிடித்துள்ளன.

மருத்துவ பிரிவில் டெல்லி எய்ம்ஸ் நிறுவனம் முதலிடத்தை கைப்பற்றியுள்ளது.

3-வது இடத்தை வேலூர் கிறிஸ்டியன் மருத்துவ கல்லூரி பெற்றுள்ளது.

சண்டிகர் முதுநிலை மருத்துவ கல்வி நிறுவனம் 2-வது இடத்தை பெற்றுள்ளது.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் லண்டன் ஆக்ஸ்போர்டு** பல்கலைக்கழகத்தில் இன்று உரை நிகழ்த்துகிறார்.

முன்னதாக பல்கலைக்கழக வளாகத்தில் பெரியாரின் திருவுருவ படத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

முன்னதாக இங்கிலாந்து அமைச்சர் கேத்தரின் வெஸ்டுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொண்ட அவர், பசுமை பொருளாதாரம், கல்வி, ஆராய்ச்சி, திறன்மேம்பாடு, கடல்சார் தொடர்பான ஆலோசனைகள் இடம்பெற்றதாக தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே ஓணம் பண்டிகையை கொண்டாடும் மலையாள மொழிபேசும் மக்களுக்கு முதலமைச்சர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**சுப்ரமணியன்**

**தமிழ்நாட்டில் புதிய நோய் தொற்கு எதுவும்** இல்லை என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

பருவமழைக்கால நோய்த்தொற்றுதான் தற்போது காணப்படுவதாகவும், இகுறித்து பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

இதனிடையே தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து காணப்படுவதால் சுயமாக மருந்துகளை மக்கள் வாங்கி உட்கொள்ள கூடாது என சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

வைரஸ் காய்ச்சல் பரவல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ்**

**தமிழக ஆசிரியர் சங்கங்களுடன் மாநில பள்ளிக்கல்வித்துறை** அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி சென்னையில் இன்றுமாலை ஆலோசனை மேற்கொள்கிறார்.

ஆசிரியர் பணியில் தொடர **TET** ஆசிரியர் தகுதி தேர்வு கட்டாயம் என்ற உச்சநீதிமன்றத்தின் உத்தரவையடுத்து இந்த ஆலோசனை நடைபெறுகிறது

முன்னதாக கல்வித்துறை செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**சென்னையில் 8 கோவில்கள் உட்பட 95** திருக்கோவில்களில் இன்று ஒரே நாளில் குடமுழுக்கு நடைபெற்றதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 3 ஆயிரத்து 600 திருக்கோவில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

இதனொரு பகுதியாக அரியலூர் மந்தைவெளி மாரியம்மன் திருக்கோவில், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில், மயிலாடுதுறை கிளியனூர் பகுதியில் 5 திருக்கோவில்கள் கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖

**சர்வதேச திரைப்பட விழா**

**50-வது சர்வதேச** திரைப்பட விழா **கனடாவின் Toronto நகரில்** இன்று தொடங்குகிறது.

வரும் 14-ம் தேதிவரை நடைபெறும் இவ்விழாவில் இந்திய திரைப்படங்களை கௌரவிக்கும் வகையில் Sholay ஹிந்தி திரைப்படம் உள்ளிட்ட சிறந்த பழைய திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்த ஆண்டு இவ்விழாவில் 50 நாடுகளின் 291 திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

**சர்பானந்த சோனோவால்**

**தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின்** பசுமை ஹைட்ரஜன் முன்னோடி தயாரிப்பு நிலையத்தை மத்திய துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் நாளை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அமைச்சர் இன்று தூத்துக்குடி வருகிறார்.

❖❖❖❖❖❖❖

**ஹாக்கி**

**பீஹார் ராஜ்கிரில் நடைபெறும் ஆசியகோப்பை** ஆடவர் ஹாக்கி சூப்பர் 4 சுற்றில் இந்தியா இன்று மலேஷியாவை எதிர்கொள்கிறது.

தென்கொரியா உடனான நேற்றைய ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖

**குத்துசண்டை**

**உலக குத்துசண்டை சாம்பியன் பட்ட போட்டிகள்** இங்கிலாந்து லிவர்பூலில் இன்று தொடங்குகின்றன.

இருமுறை உலக சாம்பியன் நிக்கத் ஸரின்,

டோக்கியோ ஒலிம்பிக் வெண்கல பதக்கத்தை வென்ற லவ்லினா பார்கோகைன் உட்பட இந்தியா சார்பில் 20 பேர் இப்போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**நியூயார்க்கில் நடைபெறும் US ஓப்பன் டென்னிஸ்** ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் யூகிபாம்ப்ரி, நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதியில் யூகிபாம்ரி இணை - குரோஷியா, அமெரிக்க இணையை வென்றது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖